


# 1 கடற்கரையில் ஒரு நாள்.

0224CH01



© NCERT not to be republished

மேலே உள்ள படத்தைப் பார்க்கவும். கீழே கொடுக்கப்பட்டுள்ள பொருட்களின் எண்ணிக்கையை எண்ணி எழுதக.

தேங்காய்கள். ☐ படகுகள் ☐

குழந்தைகள். ☐ ஆரஞ்சுகள். ☐

அவற்றை எப்படி எண்ணினீர்கள்? நீங்கள் அவற்றை ஒவ்வொன்றாக அல்லது கொத்துக்களாக அல்லது குழுக்களாக எண்ணினீர்களா?

குழந்தைகள் கடற்கரை அல்லது ஆற்றங்கரையை பார்த்திருந்தால் அல்லது சென்றிருந்தால் அவர்களுடன் கலந்துரையாடுங்கள். எந்த விலங்குகள் மற்றும் தாவரங்கள் பொதுவாக அங்கு காணப்படுகின்றன? குழுக்களாக எண்ண அவர்களை ஊக்குவிக்கவும்.





# செய்வோம்

அ. படத்தில் காட்டப்பட்டுள்ள கடைகளைப் பார்த்து கோடிட்ட இடங்களை நிரப்புக.

i. ஒவ்வொரு கழுத்தணியிலும் 10 முத்து மணிகள் கொண்ட __________ முத்துமணி கழுத்தணிகள் உள்ளன.

ii. இங்கு __________ குழு பலுன்கள் இருக்கின்றன. ஒவ்வொரு குழுவிலும் __________ பலுன்கள் இருக்கின்றன. அவறில் __________ பலுன்கள் குழுவிலிருந்து விழுந்துவிட்டன.

iii. அங்கு __________ வாழைப்பழக் கொத்து இருந்தன. ஒவ்வொரு கொத்திலும் __________ வாழைப்பழங்கள் இருந்தன. அவற்றிலிருந்து __________ வாழைப்பழங்கள் கீழே விழுந்துவிட்டன.


ஆ. சுர்பி வளையல்களும் கழுத்தணிகளும் செய்யும் தன்னுடைய அம்மாவுக்கு உதவ நினைத்தாள். ஆகையால், அவள் கடற்கரையிலிருந்து சில கிளிஞ்சல்களை சேகரித்தாள்..



இ. சுர்பி __________ குழுக்கள் கிளிஞ்சல் வளையல்கள் செய்தாள். ஒவ்வொரு வளையல் குழுவிலும் __________ கிளிஞ்சல்கள் இருந்தன.



ஈ. அவளுடைய அம்மா __________ கிளிஞ்சல்கள் அடங்கிய கழுத்தணிகளைச் செய்தார். ஒவ்வொரு கழுத்தணியிலும் __________ கிளிஞ்சல்கள் இருந்தன.




அவள் கடற்கரையில்

© NCERT not to be republished



# நாம் சிந்திப்போம்

பத்து பொதிகளில் வரும் பொருட்களைப் பட்டியலிடுக

i. ______________ ii. ______________ iii. ______________

## சுவையான சப்போட்டா!

தன் தந்தைக்குத் தட்டுகளில் அடுக்கி வைத்த சப்போட்டாக்களை விற்பதற்கு மனோஜ் உதவி செய்துகொண்டிருந்தான்..




ஒரு தட்டில் _____ சப்போட்டாக்கள் உள்ளன.


மொத்தம் எத்தனை சப்போட்டாக்கள் உள்ளன? _______

## இப்போது மனோஜுக்கு உதவுங்கள்.

அ. 25 சப்போட்டாக்கள்  : _______ பத்து சப்போட்டா தட்டுகள் மற்றும் ___ சப்போட்டாக்கள் .

ஆ. 43 சப்போட்டாக்கள்:  : _____ பத்து சப்போட்டா தட்டுகள் மற்றும் ___ சப்போட்டாக்கள்..


இ. 35 சப்போட்டாக்கள்:  _____ பத்து சப்போட்டா தட்டுகள் மற்றும் ____ சப்போட்டாக்கள்.

ஈ. 58 சப்போட்டாக்கள்:  :____ பத்து சப்போட்டா தட்டுகள் மற்றும் ___ சப்போட்டாக்கள்.


© NCERT not to be republished

# பொருத்துக


A. 80 சப்போட்டாக்கள்




B. 72 சப்போட்டாக்கள்



C. 56 சப்போட்டாக்கள்



D. 28 சப்போட்டாக்கள்




## குச்சிகள் மற்றும் பட்டைகள் விளையாட்டு.




உங்களால் குச்சித்துண்டுகளில் (குச்சித்துண்டுகளைச் சேர்த்து ஒரு வீடு அல்லது பொருள் செய்யும் விளையாட்டு) எத்தனை குச்சிகள் இருக்கிறது என்று கூறமுடியுமா?

1 குச்சிதுண்டு = ________





இந்த பத்துப் பட்டையில் எத்தனை அலகுகள்(Unit of measurement) இருக்கின்றன என்று கூறமுடியுமா?

1 பத்து பட்டை = ________ அலகு


© NCERT not to be republished




# நாம் செய்வோம்




_______ குச்சித்துண்டுகள் மற்றும் _______ துண்டுகள். மொத்த துண்டுகள் _______.




_______ குச்சித்துண்டுகள் மற்றும் _______ துண்டுகள். மொத்த துண்டுகள் _______.




_______ குச்சித்துண்டுகள் மற்றும் _______ துண்டுகள். மொத்த துண்டுகள் _______.



_______ பத்து பட்டைகள் மற்றும் _______ அலகுகள். மொத்த அலகுகள் _______.



_______ பத்து பட்டைகள் மற்றும் _______ அலகுகள். மொத்த அலகுகள் _______.



_______ பத்து பட்டைகள் மற்றும் _______ அலகுகள். மொத்த அலகுகள் _______.

கீழே கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையை நிரப்புக.

| மொத்த துண்டுகள்/ அலகுகள். | பத்து பட்டைகள் | அலகுகள் |
|---|---|---|
| 24 | 2 | 4 |
| 36 | | |
| 72 | | |
| 69 | | |
| 46 | | |

குழந்தைகளிடையே எண் உணர்வை வளர்க்க குச்சிகள் அல்லது குச்சிகளின் தொகுப்பு அல்லது ஒத்த பொருட்களைப் பயன்படுத்துக.










© NCERT not to be republished

# 100ஐ உருவாக்குவோம்!





__70மஞ்சள் அலகுகள். __30சிவப்பு அலகுகள
7 மஞ்சள் பத்து பட்டைகள். 3 சிவப்பு பத்து பட்டைகள்.. 7 மஞ்சள் பத்து பட்டைகள். 3 சிவப்பு பத்து பட்டைகள்..



___ மஞ்சள் அலகுகள். ___ சிவப்பு அலகுகள்.
7 மஞ்சள் பத்து பட்டைகள். 3 சிவப்பு பத்து பட்டைகள். மொத்தம் ___ அலகுகள் அல்லது ___ பத்து பட்டைகள். 7



___ மஞ்சள் அலகுகள். ___ சிவப்பு அலகுகள்.
7 மஞ்சள் பத்து பட்டைகள். 3 சிவப்பு பத்து பட்டைகள். மொத்தம் ___ அலகுகள் அல்லது ___ பத்து பட்டைகள். 7



___ மஞ்சள் அலகுகள். ___ சிவப்பு அலகுகள்.
7 மஞ்சள் பத்து பட்டைகள். 3 சிவப்பு பத்து பட்டைகள். மொத்தம் ___ அலகுகள் அல்லது ___ பத்து பட்டைகள். 7

100 அலகுகள் கம்பி சட்டம் உருவாக்கும் பத்து பட்டைகளின் வேறு சில சேர்க்கைகளைப் பற்றி விவாதிக்கவும்








© NCERT not to be republished

## 100ஐ உருவாக்குவோம்!

இந்த விளையாட்டை 5 அல்லது 6 பேர் கொண்ட குழுக்களாக விளையாடுவோம். ஒரு உறுப்பினர் வைப்பகத்தாராக மாறுவார். ஒவ்வொரு குழு உறுப்பினரும் இரண்டு பகடைகளை ஒன்றாக உருட்டி, அவ்வளவு அலகுகளையும் வைப்பகத்திலிருந்து எடுப்பார்கள். 10க்கு சமமான அல்லது அதற்கு மேற்பட்ட அலகுகள் இருக்கும்போதெல்லாம், அவர்கள்10 அலகுகளை வைப்பகத்தாரிடமிருந்து பத்து பட்டைக்கு மாற்றுவார்கள். அதையே விளையாடி, 10 பட்டைகளைச் சேகரித்து, 100 அலகு கம்பிச்சட்டத்தை உருவாக்க வைப்பதற்கு ராஜ்மா, கூழாங்கற்கள், சுண்டல் போன்ற பொருட்களையும் நாம் அலகுகளாகப் பயன்படுத்தலாம்.

## அட்டைகள் மூலம் எண்ணுதல்.






பத்து மற்றும் ஒன்றுக்கு வெவ்வேறு அட்டைகளைப் பயன்படுத்த குழந்தைகளை ஊக்குவிக்கவும்.

© NCERT not to be republished



## நாம் சிந்திப்போம்

3 பத்துகள் 1 ஒன்று = 30 + 1 அல்லது

| ப | ஒ |
|---|---|
| 3 | 1 |

ஆக, மொத்தம் 31 கிளிஞ்சல்கள் உள்ளன.

____ பத்துகள் ___ ஒன்றுகள் = ☐ + ☐ அல்லது

| ப | ஒ |
|---|---|
| | |

____ பத்துகள் ___ ஒன்றுகள் = ☐ + ☐ அல்லது

| ப | ஒ |
|---|---|
| | |

____ பத்துகள் ___ ஒன்றுகள் = ☐ + ☐ அல்லது

| ப | ஒ |
|---|---|
| | |

**Draw tens (▲) and ones (●) cards and fill in the blanks.**

____ பத்துகள் ___ ஒன்றுகள் = 90 + 3 அல்லது

| ப | ஒ |
|---|---|
| | |

____ பத்துகள் ___ ஒன்றுகள் = ☐ + ☐ அல்லது

| ப | ஒ |
|---|---|
| 7 | 5 |

____ பத்துகள் ___ ஒன்றுகள் = ☐ + ☐ அல்லது

| ப | ஒ |
|---|---|
| 2 | 9 |

© NCERT not to be republished








## எண்களை உருவாக்குங்கள்.

குழந்தைகள் வெவ்வேறு எண் அட்டைகளைப் பயன்படுத்தி எண்களை உருவாக்கலாம். ஆசிரியர் ஒரு எண்ணை அழைக்கிறார். 52 என்று கொள்வோம். 50 மற்றும் 2 எண்கள் கொண்ட குழந்தைகள் ஒன்றாக வந்து கீழே காட்டப்பட்டுள்ளபடி 52 என்ற எண்ணை உருவாக்குவார்கள். 27 போன்ற பிற எண்களுக்கு இதே போன்று விளையாட்டு தொடர்கிறது.




## ஆரஞ்சு பெட்டிகள்




பத்துகள் மற்றும் ஒன்றுகளில் எண்ணை மறுதொகுப்பு செய்வதில் குழந்தைகளுக்கு நிறைய பயிற்சிகள் இருக்கட்டும். எடுத்துக்காட்டாக, 73 ஆனது 70 மற்றும் 3 அல்லது 7 பத்துகள் மற்றும் 3 ஒன்றுகளால் ஆனது. இரண்டு இலக்க எண்களுக்கான பயிற்சித் தாள்களை குழந்தைகள் தாங்களாகவே தயாரிக்கட்டும்.


| | | | |
|---|---|---|---|
| 73 | 70 + 3 | 7 | 3 |
| | | | |
| | | | |







© NCERT not to be republished





27 ஆரஞ்சுகள் அல்லது 72 ஆரஞ்சுகள் இவற்றுள் எது சிறிய எண்? ஏன்?

# கோடிட்ட இடங்களை நிரப்புக. பெரியது/சிறியது.

அ. 67 சப்போட்டா 76 சப்போட்டாவைவிட ______

ஆ. 53 சப்போட்டா 35 சப்போட்டாவைவிட ______ .






## நாம் செய்வோம்

கோடிட்ட இடங்களை நிரப்புக. .

அ. 27ஐ விட 29 அதிகம்..

ஆ. 41ஐ விட ______ குறைவு..

இ. 76ஐ விட ______ குறைவு..

ஈ. ______ விட 49 அதிகம். .

உ. ______ விட 25 குறைவு. .

ஊ. 2ஐ விட ______ குறைவு..

எ. ______விட 36 அதிகம்..

ஏ. ______விட ______ அதிகம்..

குழந்தைகள் இரண்டு அளவுகளை ஒப்பிடக்கூடிய சூழ்நிலைகளைப் பற்றி விவாதியுங்கள். கூழாங்கற்கள், பளிங்குகள், பாட்டில் மூடிகள், விதைகள் போன்ற பொருட்களை இரண்டு குழுக்களாக உருவாக்குங்கள், எந்தக் குழு அதிக எண்ணிக்கையிலான பொருள்கள் கொண்டுள்ளது என்று குழந்தைகளை மதிப்பிட வையுங்கள். பொருட்களை எண்ணுவதன் மூலம் அவர்களின் மதிப்பீட்டை அவர்கள் சரிபார்க்கட்டும்.







© NCERT not to be republished




## நாம் விளையாடுவோம்

### விளக்க அட்டை விளையாட்டு.

அ. 0 முதல் 9 வரையிலான எண்களின் விளக்க அட்டைகளை உருவாக்கவும். கீழே கொடுக்கப்பட்டுள்ள விதிகளைப் பின்பற்றி அவர்களுக்கு விருப்பமான எண்களை பத்துகள் மற்றும் ஒன்றுகளை வைத்து உருவாக்கட்டும்.

1. ஒரு எண் 50ஐ விட அதிகம்..
2. ஒரு எண் 30ஐ விட குறைவு.
3. ஒரு எண் 47க்கும் 59க்கும் இடையில் இருக்கிறது..
4. நீங்கள் உருவாக்கக்கூடிய சிறிய இரண்டு இலக்க 7 எண் எது?
5. நீங்கள் உருவாக்கக்கூடிய பெரிய இரண்டு இலக்க எண் எது? நீங்கள் உருவாக்கிய எண்களில் எதனால் இதைப் பெரியதாக நினைக்கிறீர்கள்.




ஆ. இரண்டு எண் அட்டைகளை எடுத்து இரண்டு இலக்க எண்ணை உருவாக்கவும். இப்போது அந்த அட்டைகளைக் குலுக்கிய பின்பு மீண்டும் இரண்டு அட்டையை எடுங்கள். இந்த முறை வந்திருக்கும் எண் முந்தைய எண்ணைவிட பெரியதா இல்லை சிறியதா? ஒரே இலக்கங்களைப் பயன்படுத்தி மிகப்பெரிய எண்ணை எவ்வாறு பெறுவீர்கள்?

| பத்ததுகள் | ஒன்றுகள் | பத்ததுகள் | ஒன்றுகள் |
|---|---|---|---|
| 3 | 5 | 5 | 3 |
| | | | |
| | | | |
| | | | |








© NCERT not to be republished

## கடந்துச் செல்லும் பாதையைக் குறிக்கவும்

பெரிய எண்ணிலிருந்து குறைத்துக் கொண்டே வந்து சிறிய எண்ணை அடையை முயற்சி செய்க. இவ்வாறு வரும்போது எல்லா எண்களையும் குறைந்தது ஒரு முறையாவது கடந்து வந்திருக்க வேண்டும்..

| | | | |
|---|---|---|---|
| 65 | | | 73 |
| | 92 | | |
| | 53 | | |
| 20 | | 32 | |

| | | | | |
|---|---|---|---|---|
| 34 | | | 53 | |
| | 91 | | | 76 |
| | 14 | | | 11 |
| | | | | 19 |
| 23 | | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | 51 | |
| 58 | | | | |
| | | | 63 | 43 |
| 75 | | | 86 | |
| 29 | | | | 34 |

## எண்களுடன் விளையாடுவோம்.

### நான் யார்?

அ. நான் தான் பெரிய இரண்டு இலக்க எண்.

ஆ. நான் தான் பெரிய இரண்டு இலக்க எண். இதில் எந்த இலக்கமும் மீண்டும் வரவில்லை.

இ. நான் தான் சிறிய இரண்டு இலக்க எண்.

ஈ. நான் தான் சிறிய இரண்டு இலக்க எண். என்னுடைய இலக்கங்கள் மீண்டும் மீண்டும் வந்திருக்கிருக்கின்றன. சான்று 66

உ. பத்துகளின் இடத்தில் 3ஐக் கொண்ட சிறிய இரண்டு இலக்க எண் நான்.

ஊ. ஒன்றுகளின் இடத்தில் 2ஐக் கொண்ட பெரிய இரண்டு இலக்க எண் நான்.

### இதை போன்று நீங்களே சில கேள்விகளை உருவாக்குங்கள்..

© NCERT not to be republished



# வல்லம் களி

கேரளாவில் ஓணப் பண்டிகையை முன்னிட்டு பிரபலமான படகுப்போட்டி நடைபெறும். இதை வல்லம் களி என்று அழைப்பர். இந்தப் போட்டி கிட்டதட்ட முடிவுக்கு வந்து விட்டது. படத்தைப் பார்த்து ஒவ்வொரு படகின் நிலையையும் கவனி..




அ. போட்டியில் எந்த நிற படகு முதலில் வந்தது?

ஆ. போட்டியில் எந்த நிற படகு மூன்றாவது வந்தது? ________

இ. எந்த இடத்தில் நீல, பச்சை நிற படகுகள் உள்ளன? ________

ஈ. படத்தின் அடிப்படையில் இளம் சிவப்பு, ஆரஞ்சு நிற படகுகளின் நிலையை எழுதுக.. ________ ________

| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 |
| 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | **15** சுதந்திர தினம் | 16 | 17 | 18 | 19 |
| 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 |
| 27 | 28 | **29** ஓணம் | **30** ரக்ஷா பந்தன் | 31 | | |

*2023 நாட்காட்டியை அடிப்படையாகக் கொண்டது

© NCERT not to be republished



நாட்காட்டியை வாசித்து கீழே கொடுக்கப்பட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கவும்..

அ. மாதத்தில் எந்த நாளில் ஓணம் பண்டிகை கொண்டாடப்படுகிறது? ______

ஆ. சுதந்திர தினம் எப்போது கொண்டாடப்படுகிறது? ______

இ. ரக்ஷா பந்தன் இந்த மாதம் புதன்கிழமை கொண்டாடப்படுகிறது. ______ .

உங்களுடைய நண்பர்களில் யாருக்காவது ஆகஸ்ட் மாதத்தில் பிறந்த நாள் வருகிறதா என்பதைக் கண்டுபிடியுங்கள். அதை நாட்காட்டியில் குறியுங்கள்.

## ஜெர்சி எண் 17




© NCERT not to be republished

எண்களை லேபிள்களாக அல்லது பெயர்களாகப் பார்க்கக்கூடிய பல்வேறு இடங்களைப் பற்றி மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள். சான்றாக, வீட்டு எண், தூண் எண், வரிசை எண், பேருந்து அல்லது ரயில் எண் போன்றவை. 0 மற்றும் 1–9 என்ற இலக்கங்களைப் பயன்படுத்தி இன்று நாம் அனைவரும் எண்களை எழுதும் அழகிய முறை இந்தியாவில் உருவானது என்று குழந்தைகளுக்குச் சொல்லுங்கள்.